# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in

**முன்னிலை : திரு. செ. தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண். 16 /2018**

திரு. S.N.S. சுகுமாரன்,
த/பெ சண்முகம் செட்டியார்,
317/220, அவிநாசி சாலை,
திருப்பூர்–641 603.

. . . . . மேல்முறையீட்டாளர்
(திரு. S.N.S. சுகுமாரன்)

எதிர்

1) செயற் பொறியாளர்/O&M/திருப்பூர்,
திருப்பூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
குமார் நகர், அவிநாசி ரோடு,
திருப்பூர்–641 603.

2) உதவி செயற் பொறியாளர்/O&M/திருப்பூர்,
திருப்பூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
குமார் நகர், அவிநாசி ரோடு,
திருப்பூர்–641 603.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு. K.T. சந்திரசேகரன், செயற்பொறியாளர்/திருப்பூர் &
திரு. C. ராமசந்திரன், உதவி செயற்பொறியாளர்/ராயபுரம்)

<u>கேட்புரை நாள் : 28–6–2018</u>

<u>ஆணை நாள் : 31.08.2018</u>

திரு. S.N.S. சுகுமாரன், த/பெ சண்முகம் செட்டியார், 317/220, அவிநாசி சாலை, திருப்பூர்– 641 603 அவர்களின் 29.3.2018 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.16/2018 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 28.6.2018 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## <u>ஆணை</u>

### 1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>

மேல்முறையீட்டாளர் போலி ஆவணங்களின் மூலம் வழங்கப்பட்ட மின்இணைப்பு எண்.2252 மற்றும் 25520 ஆகிய இரு மின் இணைப்புகளையும் மின் துண்டிப்பு செய்யுமாறு கோரி மேல்முறையீடு செய்துள்ளார்.

### 2. <u>வழக்கின் சுருக்கம் :</u>

2.1 திருப்பூர் வடக்கு வட்டம், தொட்டிபாளையம் கிராமம், க.ச.எண்.755, 756–ல் அமைந்துள்ள மேல்முறையீட்டாளரின் பூமிக்கு எவ்விதத்திலும் சம்பந்தமில்லாத கோ. லதாவின் பொது அதிகாரம் பெற்ற திரு. டீ. ராஜா அவர்களுக்கு தற்காலிக மின்இணைப்பு SC 2252 மற்றும் 204–013–25520 வழங்கப்பட்டுள்ளது.

2.2 ராயபுரம் உதவி செயற்பொறியாளர் அவர்களிடம் திருப்பூர் வடக்கு வட்டாட்சியர் அவர்கள் க.ச.எண்.755, 756 புலத்தின் உரிமை தொடர்பாக மாவட்ட ஆட்சியருக்கு அளித்த உரிமை சான்றை சமர்ப்பித்து மேல்முறையீட்டாளருக்கு உரிமையான மனைகளில் கோ. லதாவிற்கு கொடுத்த மேற்படி மின்இணைப்பை துண்டிக்கும்படி மேல்முறையீட்டாளர் கோரினார். ஆனால், அவர் மேல்முறையீட்டாளரின் உரிமைசான்று ந.க.4451/2015/அ4 நாள் 1.7.2015 காலாவதியாகிவிட்டதால் தற்சமயம் உள்ள உரிமை சான்றை சமர்ப்பித்தால் மட்டுமே மின் இணைப்பை துண்டிக்க முடியும் என்று மேல்முறையீட்டாளரின் மனுவை நிராகரித்துவிட்டார்.

2.3 எனவே, சட்டத்திற்குப் புறம்பாகப் பெற்ற மின் இணைப்புகள் இரண்டையும் துண்டித்து நீதி வழங்குமாறு மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் மனு கொடுத்துள்ளார். மின்குறைதீர்க்கும் மன்றம், சொத்து தொடர்பாக உயர்நீதிமன்றம் சென்னையில் வழக்கு நடைபெறுவதால் தீர்ப்பு வரப்பெற்ற பின்பு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என ஆணை பிறப்பித்துள்ளது. மன்றத்தின் தீர்வில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடம் மேல்முறையீடு செய்துள்ளார்.

## 3. <u>மன்றத்தின் தீர்வு</u>

3.1 திருப்பூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 3.1.2018 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. மன்றம் வழங்கிய ஆணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"கண்டுபிடிப்பு*

- மனுதாரர் தரப்பில் மேற்கண்ட புல எண் தங்களுக்கு சொந்தமானது என்பதற்குரிய தற்போதைய உரிமைச் சான்றிதழை சமர்ப்பிக்கவில்லை.
- திரு. செ. தங்கமுத்து என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் WP No.33598/17 படி தொடர்ந்த வழக்கு நிலுவையில் உள்ளது தெரியவருகிறது.

*தீர்ப்புரை*

- *மேற்கண்ட இருதரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றைப் பரிசீலித்ததில் இந்த சொத்து தொடர்பாக உயர்நீதி மன்றம், சென்னையில் திரு. செ. தங்கமுத்து என்பவர் சார்பாக WP No.33598/17 படி தொடர்ந்த வழக்கு நடைபெற்று வருகிறது.*
- *எனவே, இம்மன்றம் இம்மனுவின் மீது தீர்வு எதுவும் எடுக்க முடியாத நிலையில் உள்ளது.*
- *உயர்நீதிமன்றத் தீரப்பு வரப்பெற்ற பின் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் எனஇம்மன்றம் மனுதாரருக்குத் தெரிவித்துக் கொள்கிறது."*

## 4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் :</u>

4.1 திருப்பூர் வடக்கு வட்டம், தொட்டிபாளையம் கிராமம், க.ச.எண்.755, 756 எங்கள் பூமிக்கு எவ்விதத்திலும் சம்பந்தமில்லாத கோ. லதாவின் பொது அதிகாரம் பெற்ற திரு. டீ. ராஜா, த/பெ தேவனுக்கு தற்காலிக மின்இணைப்பு SC 2252 மற்றும் 204–013–2552 வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மின்இணைப்பை ரத்து செய்ய கோரி ராயபுரம் உதவி செயற்பொறியாளர் அவர்களுக்கு

மேல்முறையீட்டாளர் பல்வேறு கடிதங்கள் எழுதியும் இன்றுவரை மின்இணைப்பு துண்டிப்பு செய்யவில்லை.

4.2 மேற்படி ராயபுரம் உதவி செயற்பொறியாளர் அவர்களிடம் திருப்பூர் வடக்கு வட்டாட்சியர் அவர்கள் க.ச.எண்.755, 756 புலத்தின் உரிமை தொடர்பாக மாவட்ட ஆட்சியருக்கு அளித்த உரிமை சான்றை சமர்ப்பித்து எங்களுக்கு உரிமையான மனைகளில் கோ. லதாவிற்கு கொடுத்த மின்இணைப்பை துண்டிக்கும்படி கோரினோம். ஆனால், அவர் எங்களது உரிமைசான்று ந.க.4451/2015/அ4 நாள் 01.07.2015 காலாவதியாகிவிட்டது, ஆகையால் தற்சமயம் உள்ள உரிமை சான்றை சமர்ப்பித்தால் மட்டுமே மின் இணைப்பை துண்டிக்க முடியும் என்று மனுவை நிராகரித்துவிட்டார்.

4.3 நாங்கள் எங்களுக்கு மின்இணைப்பு வழங்கும்படி விண்ணப்பம் ஏதும் கொடுக்கவில்லை. மேற்படி கோ. லதாவிற்கு உரிமைச் சான்று இல்லாமல் வழங்கிய மின்இணைப்பினை துண்டிக்கும்படிதான் விண்ணப்பித்திருந்தோம். ஆனால், ராயபுரம் உதவி செயற் பொறியாளர் கோ. லதாவின் மின்இணைப்பை துண்டிக்கவில்லை. ராயபுரம் உதவி செயற்பொறியாளர் அவர்கள் கோ. லதாவிற்கு 30 நாட்கள் அவகாசம் கொடுத்தும் லதா சமர்ப்பித்த தடையில்லா சான்று போலியானது என்றும், திருப்பூர் CCBல் விசாரணையிலிருந்து வருகின்றது என்பதை அறிந்தும், நாங்கள் சமர்ப்பித்த FIR No.9, 01.06.2016ஐ பரிசீலனையில் எடுத்துக் கொள்ளுமாறும் வழக்கு எண்.501/2015ல் I.A. 628/2015ல் லதாவின் இடைக்கால உறுத்துக் கட்டளை திருப்பூர் நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதையும் எடுத்து கூறியும் எங்கள் கோரிக்கைகளை பரிசீலிக்காமல் உதவி செயற்பொறியாளர் அவர்கள் ஆவணங்களை கூர்ந்து ஆராயாமல் தன்னிச்சையாக முடிவெடுத்து க.எண்.உ.செ.பொ/இபே/ராயபுரம்/ கோ.தனி/ க.எண்.267/17–18 நாள் 27.9.2017ன் மூலம் எங்கள் மனுவை தள்ளுபடி செய்துள்ளார்.

4.4 ஆகையால், மேற்படி எங்கள் பூமியில் உள்ள மற்ற நபர்களின் தற்காலிக மின்இணைப்பை SC 2252 மற்றும் 204–103–25520 உடனடியாக துண்டித்து உத்தரவிடுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்</u> :

5.1 திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், தொட்டிபாளையம் கிராமம், க.ச.எண்.755, 756 பூமியில் திருமதி. கோ. லதா என்பவரின் அதிகாரம் பெற்ற முகவர் திரு. டி. ராஜா என்பவருக்கு

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி தற்காலிக மின்இணைப்பு எண்.2252 இராயபுரம் பிரிவு அலுவலகத்தால் 4.1.2016 அன்று வழங்கப்பட்டுள்ளது.

5.2 மேல்முறையீட்டாளர் திரு. S.N.S சுகுமாரன், த/பெ சண்முகம் செட்டியார், அவினாசி சாலை, திருப்பூர்–3 அவர்கள் மேற்கண்ட மின்இணைப்பு வழங்கப்பட்டதை எதிர்த்து திருப்பூர் மின் நுகர்வோர்குறைதீர்க்கும் மன்றத்தில் CGRF006/17–18, நாள் 28.10.2017ன்படி வழக்கு பதிவு செய்திருந்தார். விசாரணை நடைபெற்று 3.2.2018 அன்று உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

<u>மின்குறைதீர்மன்ற தீர்ப்புரையின் சாரம்சம்</u> :

கண்டுபிடிப்புகள் :

- மனுதாரர் தரப்பில் மேற்கண்ட புல எண் தங்களுக்கு சொந்தமானது என்பதற்குரிய தற்போதைய உரிமைச் சான்றிதழை சமர்ப்பிக்கவில்லை.
- திரு. செ. தங்கமுத்து என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் WP No.33598/17 படி தொடர்ந்த வழக்கு நிலுவையில் உள்ளது தெரியவருகிறது.

தீர்ப்புரை

- மேற்கண்ட இருதரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றைப் பரிசீலித்ததில் இந்த சொத்து தெடர்பாக உயர்நீதி மன்றம், சென்னையில் திரு. செ. தங்கமுத்து என்பவர் சார்பாக WP No.33598/17 படி தொடர்ந்த வழக்கு நடைபெற்று வருகிறது.
- எனவே, இம்மன்றம் இம்மனுவின் மீது தீர்வு எதுவும் எடுக்க முடியாத நிலையில் உள்ளது.
- உயர்நீதிமன்றத் தீர்ப்பு வரப்பெற்ற பின் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் எனஇம்மன்றம் மனுதாரருக்குத் தெரிவித்துக் கொள்கிறது. ”

5.3 மனுதாரர் தனது 29.3.2018 நாளிட்ட மேல்முறையீட்டு மனு எண்.16/2018ல் ராயபுரம் பிரிவு அலுவலகத்தில் வழங்கப்பட்டுள்ள மின்இணைப்புகள் 204–013–2252 மற்றும் 25520 இரண்டையும் துண்டிக்க கோரியுள்ளார். மனுதாரர் குறிப்பிட்டுள்ள மின்இணைப்பு 25520 இப்பிரிவு அலுவலகத்தில் இல்லை.

5.4 மேலும், மனுதாரர் திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், தொட்டிபாளையம் கிராமம், க.ச.எண்.755, 756ல் உள்ள நிலங்கள் தனக்கு சொந்தமானது என்பதற்கான வருவாய் துறையிடமிருந்து தற்போது பெறப்பட்ட ஆவணங்கள் எதையும் இன்றுவரை அளிக்கவில்லை.

5.5 மின்இணைப்பு எண்.204–013–2252 வழங்கப்பட்ட மின்இணைப்பு தொடர்ந்து திரு. டீ. ராஜா என்பவரின் பயன்பாட்டில் இயக்கத்தில் இன்றுவரை இருந்து வருகிறது என்பது தெரியவருகிறது. எனவே, கு.ஆ.எண்.CE/COM/EE3/AEE2/F.SC OBJE/D.855/15, நாள் 28.10.2015ன்படி மின்இணைப்பை துண்டிக்க இயலாத நிலை உள்ளது.

## 6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>

6.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 28.6.2018 அன்று மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளர் திரு. S.N.S. சுகுமாரன் அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு. K.T. சந்திரசேகரன், செயற்பொறியாளர்/திருப்பூர் & திரு. C. ராமசந்திரன், உதவி செயற்பொறியாளர்/ராயபுரம் ஆகியோர் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தனர்.

## 7. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 மேல்முறையீட்டாளர் தங்களுடைய மேல்முறையீட்டு மனுவில் உள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 மேல்முறையீட்டாளர் தனக்கு சொந்தமான திருப்பூர் வடக்கு வட்டம், தொட்டிபாளையம் கிராமம், க.ச. எண்.755, 756 உள்ள பூமிக்கு எவ்விதத்திலும் சம்பந்தமில்லாத கோ. லதாவின் பொது அதிகாரம் பெற்ற திரு. டீ. ராஜா அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மின்இணைப்பு எண்.204–013–2252–ஐ ரத்து செய்யவேண்டும் என்று வாதிட்டார்.

7.3 மேலும், மின்சார சட்டம் 43ஆம் விதிப்படியும், TNERC–ன் மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி 27(4)இன்படியும் ஒரு நபர் அவருக்குச் சொந்தமான இருப்பிடத்திற்கோ அல்லது சட்டப்படி அந்த இடத்தில் அவர் குடியிருப்பவராக இருந்தாலோ, அவர் மின் உற்பத்தி

உரிமம்தாரரிடத்தில் (TANGEDCO)–(TNEB) மின்இணைப்பு கேட்டு அளிக்கும் விண்ணப்பத்துடன் அதற்குண்டான ஆவணங்களை இணைத்து சமர்ப்பித்து இருந்தால், மின்இணைப்பு தரலாம் என்று கூறப்பட்டுள்ளது.

7.4 ஆனால், திருமதி. கோ. லதா என்ற நபரின் பவர் ஏஜெண்டாக உள்ள D. ராஜா என்பவர் TANGEDCO-விடம் மின்இணைப்பு கேட்டு உரிமை சான்றிதழையும் மற்றும் வாடகைதாரர் என்ற சான்றிதழையும் இணைக்கவில்லை. ஆதலால் சட்டத்திற்கும் விதிகளுக்கும் புறம்பாக வழங்கிய மின்இணைப்பை (SC No.204–013–2252) துண்டிக்க உத்தரவிட வேண்டினார்.

## 8. <u>எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 எதிர்மனுதாரர் பதிலுரையிலுள்ள வாதங்களையே கேட்புரை நாளில் மீண்டும் எடுத்துரைத்தார்.

8.2 திருப்பூர் வட்ட மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் உத்தரவு நாள் 03.01.2018 மன்றத்தலைவரின் 29.01.2018 தேதியிட்ட கையெழுத்துடன் கூடிய ஆணை தீர்ப்புரையின்படியும், க.ச.எண்.755, 756ல் உள்ள சொத்து தொடர்பாக உயர்நீதிமன்றம், சென்னையில் திரு. செ. தங்கமுத்து என்பவர் தொடர்ந்த W.P.No.33598/2017 வழக்கு நடைபெற்று வருவதால் மேல்முறையீட்டாளரின் மனு மீது நடவடிக்கை எடுக்க இயலவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்தார்.

8.3 மேலும், மேல்முறையீட்டாளர் க.ச.எண்.755, 756ல் உள்ள நிலங்கள் தனக்கு சொந்தமானது என்பதற்கான வருவாய் துறையிடமிருந்து பெறப்பட்ட தற்போதைய ஆவணங்கள் எதையும் அளிக்கவில்லை என்றும் மின்இணைப்பு எண்.204–013–2252 தொடர்ந்து திரு. டி. ராஜா என்பவரின் பயன்பாட்டில், இருந்து வருவதால், நடைமுறைவிதிகளின்படி மின்இணைப்பை துண்டிக்க இயலாத நிலை உள்ளதாக தெரிவித்தார்.

## 9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

9.1 இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான தற்காலிக மின்இணைப்பு எண். 2252 மற்றும் 204–013–25520 ஆகியவற்றை மின் துண்டிப்பு கோருவது ஏற்புடையதுதானா என்பதாகும்.

9.2 எதிர்மனுதாரரின் வாதத்தின்படியும் கொடுக்கப்பட்டுள்ள ஆவணங்களின்படியும் தற்காலிக மின்இணைப்பு எண்.204–013–2252 என்ற மின்னிணைப்பு மட்டுமே திரு. D. ராஜா என்பவரின்

பயன்பாட்டில் இன்றுவரை உபயோகத்தில் இருந்து வருவதை அறியமுடிகிறது. மேலும், மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகிய இருவருமே மின்இணைப்பு எண்.204–013–2252–ஐ மின்துண்டிப்பு செய்வது சம்பந்தமாக திரு. C. தங்கமுத்து என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.33598/2017–ன்படி நிலுவையில் உள்ளது என்று தெரிவித்துள்ளார்கள்.

எனவே, நான் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறைவிதிகளின் விதி 17(4)(d) ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*17. xxx xxx xxxxx*

*(4) No Complaint to the Electricity Ombudsman shall lie unless : (a) xxx xxx xxx (b) xxx xxx xxx (c) xxx xxx xxx (d) The complaint does not pertain to the same subject matter for which any proceedings before any court is pending or a decree or award or a final order has already been passed by any competent court; and (e) xxx xxx xxx*

மேற்கண்ட விதி 17(4)(*d*) கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது முறையீட்டாளரின் புகாரில் உள்ள நுதல்பொருள் (*subject matter*) சம்பந்தமாக வழக்கு ஏதாவது நீதிமன்ற நடவடிக்கையில் நிலுவையில் இருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதிமன்றம் ஏற்கனவே கட்டளையோ தீர்ப்போ இறுதி ஆணையோ வழங்கியிருந்தாலோ அத்தகைய முறையீட்டினை மின்குறைதீர்ப்பாளரால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிகிறது.

9.3 எனவே, முறையீட்டின் புகாரில் உள்ள நுதல்பொருளும் W.P.No.33598/2017–ல் நிலுவையிலுள்ள திரு. C. தங்கமுத்து என்பவர் தொடர்ந்த வழக்கின் கோரிக்கையில் உள்ள நுதல் பொருளும் ஒன்றா என்று அறிய நான் W.P.No.33598/2017–ல் உள்ள கோரிக்கைகளை ஆராய விரும்புகிறேன். அதன் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*" 17. I submit that now the power agent of the 4th respondent has been giving pinpricks by taking advantage of the order impugned . Hence, I pray this Hon'ble Court to grant an order of interim injunction restraining the 4th respondent or her men, and agents from in any way disturbing my peaceful possession and enjoyment over the subject matter property measuring 7.00 acres in S.F.No.755 and 756, Thottipalayam Village, Tiruppur District pending disposal of this writ petition before this Hon'ble Court and thus render justice.*

*It is therefore, prayed that this Hon'ble Court may be pleased to issue writ, order or direction specifically. Writ in the nature of writ of CERTORARIFIED MANDAMUS calling for the records relating to the impugned order dated 26.09.2017 made in Lr.No.AEE/O&M/Rayapuram/File Sep./Lr. No.266/17-18 passed by the 3rd respondent, quash the same and direct the respondents 1 to 3 to disconnect the temporary E.B. Service Connection No.204-013-2252 issued in the name of the 4th respondent and pass such further or other suitable order as this Hon'ble Court deems fit and proper in the circumstances of the case and thus render justice."*

**9.4** மேற்கண்ட W.P.No.**33598/2017–**ல் திரு. **C.** தங்கமுத்து என்பவர் க.ச.எண்.**755** மற்றும் **756**ல் அவருடைய பாத்தியத்திலும் அனுபவத்திலும் உள்ள சொத்துக்களில் நான்காம் பிரதிவாதியான திருமதி. கே. லதாவோ அல்லது அவருடைய ஆட்கள் மற்றும் முகவர்களோ எந்தவித இடையூறும் செய்யக்கூடாது என உறுத்துக்கட்டளை பிறப்பிக்குமாறு கோரியுள்ளார். மேலும், அவருக்கு சொந்தமான இடத்தில் கொடுக்கப்பட்ட மின் இணைப்பு எண்.**204–013–2252–**ஐ ஒன்று, இரண்டு மற்றும் மூன்றாம் பிரதிவாதிகள் மின்துண்டிப்பு செய்யவேண்டுமெனவும் கோரியுள்ளார்.

மேற்கண்ட மின் இணைப்பைத்தான் என் முன்னால் உள்ள மேல்முறையீட்டு மனு எண்.**16/2018**ல் உள்ள வழக்கில் மேல்முறையீட்டாளர் மின்துண்டிப்புசெய்யவேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்.

**9.6** எனவே, பத்தி **9.3** மற்றும் **9.4**இல் உள்ள தீர்வுகளின்படி மேற்கண்ட மின்இணைப்பு சம்பந்தமாக திரு. செ. தங்கமுத்து என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கு W.P.No.**33598/2017** நிலுவையில் உள்ளது என்பதால் மன்ற விதி **17(4)(*d*)** ன் படி மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டு மனுவை ஏற்றுக்கொண்டு மின்குறைதீர்ப்பாளர் தீர்வு எதுவும் வழங்க முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

## **10.** <u>கவனிப்பாய்வு</u>

**10.1** திருமதி. கோ. லதா அவர்கள் திரு. டீ. ராஜா என்பவருக்கு வழங்கியுள்ள பொது அதிகாரப் பத்திரத்தை மட்டும் தற்காலிக மின் இணைப்பு கேட்டு எதிர்மனுதாரருக்கு வழங்கியிருக்கிறார். மின்இணைப்பு கேட்டு சமர்ப்பித்த விண்ணப்பத்தில் மின்இணைப்பு எண்.**204–013–2252**ல் கூறியுள்ள இடத்தின் S.F No.**755** ஆகும். பொது அதிகாரப் பத்திரத்தில் சொத்து விபரத்தில் கூறியுள்ள இடங்களின் S.F No.**755** மற்றும் **756** ஆகும். ஆனால், S.F No.**755** மற்றும் **756**ல் உள்ள

நிலத்தின் உரிமம்தாரர் திருமதி. கோ. லதா என்பதற்குரிய ஆதாரம் எதுவும் பெறாமலும், பொது அதிகாரப் பத்திரத்தில் கூறியுள்ள S.F No.755, 756–ல் உள்ள நிலத்தின் சொத்துரிமை பற்றிய செய்தியின் உண்மைத்தன்மையை அதில் குறிப்பிட்டுள்ள மூலப்பத்திரத்தைப் பெற்று ஆராயமலும் எதிர்மனுதாரர் மின்இணைப்பு வழங்கியுள்ளார்.

10.2 22.6.2017 அன்று வழங்கப்பட்ட W.P.No.37889 of 2016 மற்றும் W.M.P.No.32468 of 2016 குரிய உயர்நீதிமன்ற ஆணையில் எதிர்மனுதாரர் உதவி செயற்பொறியாளர்/ராயபுரம் அவர்கள் திருமதி. கோ. லதா (W.P.No.37889ன் வாதி), திரு. C. தங்கமுத்து மற்றும் S.N.S. சுகுமாரன் (5 மற்றும் 6–ம் பிரதிவாதிகள் in W.P.No.37889) ஆகியோருக்கு வாய்ப்பளித்து விசாரணை செய்து முடிவு எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளார். மேலும், உயர்நீதிமன்ற ஆணையில் உதவி செயற்பொறியாளர் நடத்தும் விசாரணையில் திருமதி. கோ. லதா அவர்கள் அவரது உரிமையை நிலைநாட்ட சொத்துரிமைப்பத்திரம் அல்லது அனுபவ உரிமை பற்றிய அதிகாரப்பூர்வமான எழுத்து வடிவ ஆவணங்களை சமர்ப்பித்து ஒத்துழைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளார். ஆனால், விசாரணை அதிகாரியான உதவி செயற்பொறியாளர்/ராயபுரம் அவர்கள் வழக்கிற்குட்படுத்தப்பட்ட 5 மற்றும் 6ம் பிரதிவாதிகளை திரு. C. தங்கமுத்து மற்றும் திரு. S.N.S. சுகுமாரன் ஆகியோரை மட்டும் விசாரணை செய்துவிட்டு திருமதி. கோ. லதா அவர்களை விசாரணை செய்யாமல் ஒருதலைபட்சமாக முடிவு எடுத்து ஆணை வழங்கியுள்ளார். வழக்கின் பிரதிவாதிகள் வாதமே S.F.No.755, 756–ல் உள்ள நிலத்தின் உரிமையாளர் திருமதி. கோ. லதா அல்ல என்பதாகும். திருமதி. கோ. லதா தான் விசாரிக்கப்படவேண்டிய நபர். மின் இணைப்பு பெற்ற வாதியான திருமதி. கோ. லதா அவர்கள் தான் சொத்துக்குரிய தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டும். எனவே, விசாரணை அதிகாரியான உதவிசெயற்பொறியாளர் நடத்திய விசாரணை ஒருதலைபட்சமானது. ஆகையால் மின்இணைப்பு எண்.204–013–2252–ஐ தேவையான ஆதார ஆவணங்கள் பெறப்படாமல் கொடுக்கப்பட்டுள்ளதாக நான் கருதுகிறேன்.

## 11. <u>முடிவுரை</u>

11.1 இந்த மேல்முறையீட்டாளர் மின்துண்டிப்பு கோரும் மின்இணைப்பு எண்.204–013–2252 சம்பந்தமாகவும் மற்றும் அந்த மின்இணைப்பு எண் வழங்கப்பட்டுள்ள சொத்தின் அனுபவம் உரிமை சம்பந்தமாகவும் வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு W.P.No.33598/2017–ன்படி நிலுவையில் உள்ளதால் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதித்தொகுப்பின் விதி 17(4)(d)ன் படி மின்குறைதீர்ப்பாளர் மேல்முறையீட்டாளரின்

மேல்முறையீட்டு மனுவை ஏற்றுக்கொண்டு தீர்வு எதுவும் வழங்க முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

11.2 மேற்கண்ட தீர்வுடன் முறையீட்டு மனு எண்.16/2018 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்

1) திரு. S.N.S. சுகுமாரன்,
த/பெ சண்முகம் செட்டியார்,
317/220, அவிநாசி சாலை,
திருப்பூர்–641 603.

2) செயற் பொறியாளர்/O&M/திருப்பூர்,
திருப்பூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
குமார் நகர், அவிநாசி ரோடு,
திருப்பூர்–641 603.

3) உதவி செயற் பொறியாளர்/O&M/திருப்பூர்,
திருப்பூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
குமார் நகர், அவிநாசி ரோடு,
திருப்பூர்–641 603.

4) மேற்பார்வை பொறியாளர்,
திருப்பூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
19–A, ஜோதி நகர், பெருமாள் நல்லூர் ரோடு,
திருப்பூர்–641 603.

5) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

6) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

7) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.